
உலகம் சுற்றும்
அலிபாபா!
ஜினியர்
லயன் காமிக்ஸ்
முழு வண்ண
சித்திரக் கதை!



சுஸ்கி & விஸ்கி
லக்கி லூக்
டிம்பி & ஜெர்ரி
ஜூனியரில் வருகிறர்கள்...!






"லயன் புக் ஹவுஸ்" நிறுவனத்தின் சார்பாக "ஜூனியர் லயன் காமிக்ஸ்" வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் புக் ஹவுஸ், த. பெ. எண். 55, சிவகாசி-626 123. வெளியீடு எண்: 2. போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி.


நீ செய்த தவறினால் நான் இப்படி குரங்காய் மாறிவிட்டேனே!
எந்நேரமும் தவறான மந்திரத்தை சொல்லி- பிராணனையெல்லாம் வாங்குகிறாய் சனியனே!
சத்! சத்!
எங்கேயாவது ஒழிந்து போ! தரித்திர விளக்கே
ணங்!
இது என்ன? விளக்கு வந்து விழுகிறது!
சட்டை போட்டிருந்த அந்தக் குரங்கு அதற்குள் எங்கே மாயமாய் போனது?


இந்த விளக்கு ஜோராய் தான் இருக்கிறது, நன்றாகத் துடைத்-தால், சந்தையில் விற்று நாலு காசு சம்பாதிக்கலாம்!
ஏய்! என்ன செய்தாய்? என்ன சத்தம்?
ஸ்ஸ் ஸ்!
மறுகணம்-
அல்லாவுதீன் என்னை அழைத்தாயா? உன் அன்புக் கட்டளைக்காகக் காத்திருக்கும் உன் வேலைக்காரன் இதோ வந்திருக்கிறேன்!
அய்யோ! இதென்ன கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாய் போச்சு!
ஆ! ஆவியா? பூதமா?


மன்னிக்கனும் பெரிய ஆவியே! நான் அல்லாவுதீன் இல்லை நான் அலிபாபா!
அடக் கடவுளே? வரவர என் பார்வை ரொம்ப மோசமாகிவிட்டது!
பரவாயில்லை அலி! இப்போதெல்லாம் அல்லாவுதீன் என்னை அழைப்பதே இல்லை- அதனால் நான் உனக்கு ஏதாவது உதவி செய்யட்டுமா?
என் பெயர் கிப்கிப்! இந்த விளக்கை நீ தொட்டவுடன் நான் உனக்குக்காட்சியளிப்பேன்! உன் ஆசையை நிறைவேற்றுவேன்!
ஆ! என்னால் நம்பவே முடியவில்லை! இப்படி ஒரு அதிர்ஷ்டம் எனக்கா?
ஒரு முக்கியமான விஷயம் சொல்ல மறந்து விட்டேனே!
என்னை அடிக்கடி கூப்பிடக்கூடாது. எனக்கு வயசாகி விட்டதால் உடம்பே பலவீனமாக உள்ளது! நிறைய இனிப்பு சாப்பிட்டதால் சக்கரைச் சத்தும் வந்துள்ளது!



சீக்கிரமாய் உன் ஆசையை சொல்லேன் அலி! உடனே ஆவியின் திறமையை சோதித்துவிடலாமல்லவா?
கப்பல் இருந்தால் கடலைக் கடந்து ஆங்கிலேயருடன் வியாபாரம் செய்யலாம்!
கடல் கடந்து உலகம் முழுவதும் வியாபாரம் செய்ய ஒரு சொகுசுக் கப்பல் இருந்தால் ஜோராக இருக்கும்!
சும்மா தைரியமாய் கேளு அலி!
என்னுடைய முதல் ஆசை ஒரு கப்பல்!
இதற்கு இத்தனை நேர யோசனையா? என் மதியத் தூக்கத்திற்கு நேரமாகிறது தம்பி!


அதுசரி! உங்களுக்கு சின்னக் கப்பல் வேணுமா? பெரிய கப்பல் வேணுமா?
மிகப் பெரிய கப்பல்! வானத்தை தொடும் அளவுக்கு பெரிய தாய் இருக்க வேண்டும்!
ஏகப்பட்ட பதார்த்தங்களுடன் கூடிய கப்பலாய் கிடைக்கிறதா என்று பாருங்களேன் பூதத் தாத்தா!
ஓ! அப்படியும் ஒரு ஆசையா?
உங்கள் ஆசைகளை நிறைவேற்ற இந்த மந்திரத்தைதான் சொல்லவேண்டும் என்று நினைக்கிறேன்!
டுஷ்ஷும்!
நாசமாய்ப் போச்சு! இந்தமுறையும் மந்திரங்களை குழப்பி விட்டேனே!
வயசாகி விட்டதல்லவா? மாயா ஜாலங்களும் மறந்துவிட்டது!
என்னுடைய மாய ஓலை எங்கே?


ஆ! இதோ இருக்கிறது! அதிலே பார்த்தால் எல்லாம் தெரியும்!
பல மைல்களுக்கு அப்பால் ஆழக்கடலில் நண்டுகளுக்கு மத்தியில் ஓர் சிதைந்த கப்பல் கிடந்தது.
மறுகணம் –
சொய்ங்
அடக்கடவுளே! இவ்வளவு நேரம் இங்கிருந்த கப்பல் மாயமாய் மறைந்து போச்சு! போலீஸ்!
போலீஸ்!
கேவலம்! இந்தப் புழு தான் எனக்குத் துணையா?
சே!



ஹா! ஹா! இதோ நீங்கள் கேட்ட அற்புதக் கப்பல்!
ஐயையோ! இது உங்கள் காலத்தில் செய்யப்பட்ட கப்பலாய் இருக்கும்போல் தெரிகிறதே கிப்-கிப் சார்!
சே! இந்த மனிதர்களை திருப்திப்படுத்தவே முடியாது!
இங்கேயும் அங்கேயும் அலை-வதற்குப் பதிலாக ரெஸ்ட் எடுத்திருக்கலாம்!
எனக்கு இருதயம் கொஞ்சம் பலவீனம்! குடலிலும் கோளாறு!



சில நேரம் மூளையே குழம்பிவிடுகிறது!
அதனால் இன்று போய் நாளை வருகிறேன்— ஒரு குட்டித் தூக்கம் போட்டு விட்டு!
சரியான சோம்பேறிப் பூதமாய் இருக்கும் போலிருக்கிறதே!
இதை வைத்துக் கொண்டு எப்படித்தான் அல்லாவுதீன் சமாளித்தானோ?
இந்த ஆதிகாலத்துக் கப்பலை என்ன செய்வதாம்? இதை பழுது பார்க்கலாமா?
இதை காயலான்கடையில் போட்டால் பேரீச்சம்பழம் கூட கிடைக்காது!
அவசரப் படாதே!
ஆ—! ஆணிகள்! சுத்தி! பலகைகள்! எல்லாம் தேவை!


நல்ல அழுத்தமான பலகை-கள் பாய்மரம் கட்ட துணி!
இவ்வளவையும் கழுதை முதுகிலா வைத்திருந்தாய்?
அந்த சோகக்கதை எனக்குத்தானே தெரியும்!
ஏய்! முஸ்தாபா! உடனே வேலையை ஆரம்பிப்போம்
டக்டக் டக்!
சர்... சர்...
ஆஆ!
அய்யோ! கை போச்சு!
உன் திறமையே தனிதான்!
ஆணியை மலர் போல் மென்மையாய், விரல் நுனியில் பிடிக்க வேண்டும், ஜயாவின் கைவரிசையை பார்!


ஆஆ!
மிகக் கடினமான வேலையாய் இருந்தாலும் தளராமனம் படைத்த நம் சாதனையாளர்கள், கப்பலை செப்பனிட்டு முடித்தார்கள். காலிபா நகரத்தை அடைந்து அங்கு பேரீச்சம்பழ வியாபாரம் செய்ய எண்ணி புறப்பட்டனர்.
சரி விடப்பா! ஆணி வேண்டாம்! ஸ்க்ரூ வைத்து அடிக்கலாம்!
ஆ! கலிபா தெரிகிறது!
அப்பாடா! வந்து விட்டதா?
முதலில் ஒரு நல்ல ஹோட்டலில் நல்ல சாப்பாடு சாப்பிட வேண்டும்!
இந்தக் கப்பல் பிரயாணத்தில் மீன் சாப்பிட்டு சலித்துப் போய்விட்டது!
தொடர்ந்து ஆறு நாள் மீன்-மீனே மீன்! தாங்கவே முடியவில்லை


ஹேய்! அங்கு ஓர் அரேபியக் கப்பல் தெரிகிறது!
மொட்டை அடிக்க ஆள் கிடைத்துவிட்டது!
உன் பேராசைக்கு அளவே கிடையாதா?
சரி கப்பலை நிறுத்த ஏற்பாடு பண்ணிவிட்டாயா?
ஓ! எல்லாம் ரெடி!
வரட்டும், வரட்டும்! எவனாக இருந்தாலும் சரி! இன்று அவனை தொலைத்து விடுவேன்!
ஹல்லோ!
ஹல்லோ! இந்த அழகிய நகரின் குடிமக்களா நீங்கள்?
வியாபார விஷயமாய் தானே வந்திருக்கிறீர்கள்!



ஒரு மணி நேரம் கழித்து—
மிஸ்டர் கிளார்க்சன், என் பேரீச்சம் பழங்களை இறக்கிவிட்டேன்! நம் ஒப்பந்தப்படி நடந்து கொள்வது உங்கள் பொறுப்பு!
சரி! செய்து விடுவோம்!
ஏய்! கூலி!
இந்த சரக்குகளை இவர்கள் கப்பலில் ஏற்றிவிடு!
25 டிரம் விஸ்கி, 600 மீட்டர் துணி, 60 விர்ப்பூல் சமுக்காளம்-
பேரமெல்லாம் நல்லபடியாக பேசிமுடிந்ததா?
முடிந்தது! ஆனாலும் என்னை அவர்கள் மொட்டையடித்து விட்டது போன்ற பிரமை ஏற்படுகிறது! பேரீச்சம்பழம் இவ்வளவு விலை உயர்ந்த-தா என்ன? சே!


நுங்கள் என்
ன்னாடியே வ ருங்கள்!
ஹேய்!
கப்பல் உள்ளேயே வந்து இறக்க முடியுமா?
இதோ!
சிலிமான்!. என் கண்ணுக்குத் தெரிவது உன் கண்ணுக்கும் தெரிகிறதா?
ஆமாம்! ரஷீத் நம்பவே முடியலையே!
உண்மையை எப்படியும் கண்டுபிடித்து விடுவோம்!
இரவின் அரவணைப்பில் கலிபா உறங்க ஆரம்பித்து விட்டது! இருடர்களுக்கு பயந்து அலிபாபா கப்பலை விட்டு சற்று தூரத்தில் நிறுத்தி இருந்தான்!


அந்த இருட்டில் இரண்டு பரிச்சயமான உருவங்கள் அலியின் கப்பலை மிக ஆர்வத்தோடு கவனித்துக்கொண்டிருந்தன -
நிலா மறைகிறது! சிலிமான்! இதுதான் நமக்கு நல்ல நேரம் இருட்டு நமக்கு சாதகமாய் இருக்கும் வா!
எனக்கு பயமாக உள்ளது! மற்றவர்களையும் கூப்பிட்டுக் கொள்வோம்!
முகரையை பெயர்த்து விடுவேன்!
சரியான தூக்கம் போடுகிறார்கள்! குறட்டை ஒலி காதைப் பிளக்கிறதே!
ஆ! அல்லா! இதோ ஒரு விளக்கு எரிகிறதே!
இந்த விளக்கு எனக்கு உபயோகப்படும்! கும்மிருட்டாயுள்ளதே!



விளக்கிலும் எண்ணை நிறைய இருக்கிறது! வெரிகுட்!
ஸ்ஸக்
ஸ்ஸக்
அம்மாடி!
ஆ!- பூதம்!- பேய்! என்னை காப்பாற்றுங்கள்!
நான் வாழும் மாளிகைக்குள் நெருப்பை திணித்தது எந்த மடையன்?
அய்யோ! இது என்ன குட்டிச் சாத்தானு?
டமால்!



என்ன சத்தம்?
திருடன்! திருடன்!
ஐயோ! நம் அதிசய விளக்கைக் காணோமே!
வா! வா! போய்ப் பார்ப்போம்!
ஓ!
உல்கே மாாாாயம- பூத வாழ்வே மாாாாயம்-
இதென்ன புதுக்கூத்து! ஜீபூம்பாவுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா? ஒரே பாட்டு மயமாய் இருக்கிறதே! நிறைய குடித்துவிட்டு வேறு-


இந்த நிலையில் கிழத்தால் விளக்கினுள் போக முடி-யாது! நாம் தான் ஒத்தாசை செய்ய வேண்டும்!
ஹ்க!-
வயசாகியும் விவேகம் வரவில்லையே!
எனக்கு இன்னும் ஒரு பாட்டில் வேணும்! சாருக்கு ஒரு பா-பாட்டில் ஜின் கொண்டாப்பா-
ஹோ! ஹோ! ஹோ! ஹோ!
கோபம்!
சத்தம் போடாமல் உன் விளக்கிற்குள் இப்பொழுது போகப் போகிறாயா?... இல்லை ...
அடேய் பொடியா! என் வயசுக்கு மதிப்பு கொடுக்கா விட்டால் கெட்ட கோபம் வரும்! எனக்கும் சுய மரியாதை உண்டு!


அல்லாவின் மகிமையால் நீ ஒரு சொறித் தவளையாக மாறிப்போ!
சூ- மந்திரகாளி!
ட-ட டாய்ங்!
திரும்பவும் மந்திரத்தை மாற்றிச் சொல்லிவிட்டது கிழம்! தானே தவளையாய் மாறிவிட்டது- பாவம்! இப்படியும் ஒரு கூமுட்டை பூதம்!
இதுதான் சமயம்! விளக்கில் தள்ளி அடைத்துவிடுவோம்!
ஐயோ!
சரி இப்போதைக்கு படுத்து தூங்குவோம்! நாளைக்கு நிறைய வேலை உள்ளது!
சடக்!
அப்பாடா!



போன காரியம் என்ன ஆச்சு?
அய்யோ! அந்த பயங்கரத்தை ஏன் கேட்கிறீர்கள்? பெரிய பூதம் அங்கே உள்ளது! கை, கால் எல்லாமே ரொம்பப் பெரிசு! வாயைத்திறந்தால் இடிமுழக்கம்தான்!
இதென்ன ஒரு மாதிரி நெடி?
தெரியலையே!
டேய்! பூதம் உன்னை விஸ்கி குடிக்க அழைத்ததா? குடித்து விட்டு என்னிடம் கதையாவிடுகிறாய்? தோலை உறித்துவிடுவேன்!
ரஷித்!வந்து
இரு- உன் போதையை நான் தெளியவைக்கிறேன்!
மறுநாள் காலை அலியும் முஸ்த்தபாவும் உணவுப் பொருட்கள் வாங்க கடை வீதிக்கு சென்றார்கள்- கூட்டமும், கூச்சலுமாய் கலகலப்பாய் இருந்தது வீதி!
ஆரஞ்சு வேணுமா? நயம் ஆரஞ்சு!
இந்த கம்பளத்தை வாங்குகிறீர்களா?


அப்பப்பா! கொஞ்சம் அசந்தால் ஊரையே தலையில் கட்டி விடு- வார்கள்!
தம்பிகளா, எனக்கு கொஞ்சம் உதவுகிறீர்களா?
அட, நீ எங்கள் சாமான்களை ஏற்றிக்கொடுத்த கூலியாள் அல்லவா?
ஆமாம்! தாக்பாத் நகரிலிருக்கும் வயதான என் தாயார் மரணப் படுக்கையில் கிடக்கிறாள். அவளை பார்த்து வர விரும்புகிறேன்!
நீங்கள் மட்டும் என்னை உங்கள் கப்பலில் தாக் பாத்துக்கு அழைத்துச் சென்றால் உங்களுக்கு நாயாக நான் உழைக்க தயார்!
சரி! உன்னை நான் வேலைக்கு சேர்த்துக் கொள்கிறேன்!
CHEZ RATH
வெற்றி சிலிமான்! அந்த கப்பலிலேயே தாக்பாத் வரை செல்கிறேன்!
அடி சக்கை! உங் கள் திறமையே தனிதான் அண்ணே!


இந்த செய்தியை ஆமீனுக்கு சொல்லி அனுப்பவேண்டும்!
உனக்கென்ன பைத்தியமா? செய்தி தெரிந்தால் அமீன் கோபப்படுவான்!
எனக்கு உன் யோசனையும் உதவியும் இனி தேவையில்லை!
கூன் முதுகு முண்டம்! உன்னை இப்படியே விட்டு விடுவேன் என்று நினைக்காதே! பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்!
நீ சுமந்து செல்லும் செய்தியை கண்டு அமீன் மிகவும் சந்தோஷப்படுவான்!
ஒரு மணி நேரத்திற்குப் பின் நம் நண்பர்களின் கப்பல் ஆழ்கடலைக் கடந்து தாக்பாத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது-
தாக்பாத்- இதோ வருகிறோம்!


ரஷித் எங்களுக்குப் பசிக்கிறது! உடனே சமையலை ருசி பார்க்க ஆவலாய் இருக்கிறோம்!
ஓ- அதற்கென்ன?
அப்பா! பசி வயிற்றைக் கிள்ளுது! இன்றுஎன்ன பதார்த்தமோ?
சற்று பொறுமையா இரு முஸ்த்தாபா! அவன் கொண்டு வரப் போகும் உணவை ஜென்மத்திலும் நீ ருசித்திருக்கவே மாட்டாய்!
சமையலுக்கும் எனக்கும் ரொம்ப தூரம் என்றாலும் இந்த மடையர்களை திருப்திபடுத்த சிரமமாய் இருக்காது!
ஓடி வாருங்கள்! நான் சமைத்த அற்புத சாப்பாட்டை ருசித்துப் பார்க்க வாருங்கள்!
ஐயோ! இதென்ன கண்றாவியாய் இருக்கிறதே! துர்நாற்றம் சகிக்க முடியவில்லை!
அப்பா - வயிற்றை என்னவோ செய்கிறது!
வாங்க! வாங்க- கடல் மீனும் பேரீச்சம்பழமும் கலந்து தயாரித்திருக்கிறேன்!
ஆ- ஆண்டவனே! அல்லா! காப்பாற்று!
முஸ்தாபா!
தொபுக்!



இந்தக் கயிற்றைப் பிடித்துத் தொலை மடையா!
அந்த- அந்த நாற்றம் கப்பலில் இருக்கும் வரை நான் மேலே வரமாட்டேன்! இது சத்தியம்!
ஹைய்யா! ஒரு குட்டி மனிதன் தெரிகிறானே நல்ல விருந்து இன்னைக்கு!
ஆ ஆ ஆ! போலீஸ்! கொலை! சுறா!
அவுக்!
கடக்! கடக்!
ரஷித்! ஓடிவா! உதவி செய்!
இழுத்துப் பிடியுங்கள்! இதோ நொடியில் வாரேன்!


அலி! ஜாக்கிரதை!
?
உ-உனக் கொன்றும் ஆ-ஆபத் தில்லையே!
பயப்படும் அளவுக்கு ஒன்றுமில்லை! சற்று அதிகமாக நனைந்து விட்டேன்! அவ்வளவுதான்!
அலி இந்தக் கூனனை எனக்கு கட்டோடு பிடிக்கவில்லை! நான் மட்டும் வராதிருந்தால் உன் முதுகில் கத்தியை சொருகி இருப்பான்! பாவிப்பயல்!
சுரு மீதிருக்கும் வெறுப்பை அவன் மீது காட்டாதே! அவன் பாவம் அப்பாவி!
இரவு- நல்ல அமைதியான கடலை, முழு நிலா தழுவிக் கொண்டிருந்தது- மணி பத்து இருக்கும்-
நீங்கள் நிம்மதியாகத் தூங்கப் போகலாம்! நான் கப்பலை பார்த்-துக்கொள்கிறேன்!
குட்நைட் முஸ்த்தாபா!
எனக்கு இந்த கூனன்மீது நம்பிக்கை வரவில்லை! மனதே சரியில்லை!


நாம் வைத்திருக்கும் சரக்கில்தான் அவன் கவனமெல்லாம்! அவனை நான் கண்காணித்துத்தான் வருகிறேன்! இன்று அவன் என்ன செய்து கொண்டிருந்தான் தெரியுமா?
அட நிம்மதியாகத் தூங்கப்பா! உன் சந்தேகப்புத்தி உன்னை விட்டுப்போகாது!
புதிய துணிப்பார்சல்களை தள்ளிக்கொண்டு எதையோ ஆராய்ந்து கொண்டிருந்தான்!
கொர்ர்.. ர்ர்
சே! நான் பேசிக்கொண்டேயிருக்க இவன் குறட்டைவிட்டுக் கொண்டிருக்கிறானே! செவிடன் காதில் சங்கு ஊதியது போலத்தான்!
கொர்ர்
இப்படி ஒரு ஏற்பாடுபண்ணி விட்டால் தானாகவே சீரான பாதையில் போகும்!
அங்கே மேல் தளத்திலோ-
இந்த கோழிக்குஞ்சுகள் உறங்கட்டும்!
கொர்ர்ர்ர்



சே! இத்தனை சாமான்களா!
இந்த முறை உன்னை கையும் களவுமாக பிடித்துக் காட்டு கிறேன்!
நாசமாய்ப்போச்சு! பாழும் மரப்படிகட்டு!
கராக்!
அடேய்! குட்டிச்சாத்தான் எங்கே வந்தாய்?
ஐயோ!
?
உன் அதிகப்பிரசங்கித்தனத்துக்கு ஒரு பரிசு தருகிறேன் பார்!


சத்!
கர்ர்ர்!
ஆஆ!
ஒரு நிமிஷம் சமாளித்துக்கொள்! இதோ வந்துவிட்டேன்!
அப்பா- நான் செத்தேன்!
என் சுயரூபத்தை உங்களுக்கு இனி காட்டுகிறேன் பொடியர்களா!
பொத்!
உங்கள் கதை இத்தோடு முடிந்தது!
ஜெய் அல்லா!
ஐயோ! காப்பாற்றுங்கள்!
தடக்!



எனக்கு வருகிற கோபத்-திற்கு உன்னை-
உன்னை என்ன செய்கிறேன் பார்! இதோ வாங்கிக்கொள் கும்மாங்குத்து!
ஆ! ஆ!
க்ர்ர்ர்!
மு முஸ்தாபா மெதுவாக அ-அடி!
டமால்!
டம்! கும்!
விட்டுவிடு! பிழைத்துப் போகிறான் பயல்!
இந்த சாத்தானை பிடித்துக் கொள்ளுங்கள்! என்னை கொன்றே விடுவான் காட்டுமிராண்டிப்பயல்!



எதற்காக எங்களுடன் ஒட்டிக் கொண்டாய்? என்ன சதித் திட்டம் தீட்டியிருக்கிறாய்?
பேசாவிட்டால் உன் மென்னியை திருகி விடுவேன்!
அட ரொம்பத்தான் அலட்டிக் கொள்கிறாயே! பேரீச்சம் பழம் கூட்டு சமைத்துத் தரவா இன்னொரு முறை? ஹா! ஹா! ஆ-
அடேய், கோபத்தை திரும்பவும் கிளறாதே!
உன் குணம் எனக்குத் தெரியாதா தம்பி? என்னதான் இருந்தாலும் கட்டப்பட்டுக் கிடக்கும் என்னை நீ தாக்குவாயா?
ஐயோ! பேய்! பேய்!
அதி காலையில்—
முஸ்தாபா இந்த கூனனை என்ன செய்யலாம்!
இவன் விஷயத்தில் ஏதோ பயங்கர சூழ்ச்சி இருக்கிறது!
இவன் சட்டத்தால் தேடப்பட்டு வரும் பயலோ என்னவோ?
32


அவனை பார்த்துக்கொள்! நான் சரக்குகளை சரி பார்த்து வருகிறேன்!
விரைவில்—
எல்லாம் சரியாக உள்ளதே!
அலி! அலி! சீக்கிரம் ஓடி வா!
அதோ! தெரியுதுபார்! அந்த வெள்ளைக்கப்பல் நம்மை நோக்கித்தான் வருகிறது!
ஏன்? அவர்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?
ஐயையோ!
ஏன் இவன் அழுது கொட்டுகிறான்?
என்னை அவிழ்த்துவிடுங்க! என்னை கொன்றுவிடுவாங்க!
!


ஆனால் ரஷித்தால் எந்தக் கதையும் சொல்லி முடிக்க முடியவில்லை- எதிரியின் தாக்குதல் மின்னல் வேகத்தில் வந்தது-
தாக்குங்கள், பசங்களா!
டேய் கூண் முதுகா! என்னை அடையாளம் தெரிகிறதா?
அமீன் சாஹிப்! சாஹிப்! உ- உங்களை அடையாளம் தெரியாமலா! ஹி! ஹி!


உன்னை திரும்பவும் சந்தித்ததில் மிக மகிழ்ச்சி!
எனக்கும் தான் பிரபோ! இப்பொழுது மட்டும் இப்படி கைதியாய்கட்டி யிருக்கப்படாவிட்டால் ஆனந்தக் கூத்தே ஆடுவேனே!
அடடா! உன் விசுவாசத் தைப் பற்றி குட்டையன் சிலிமான் விரிவாக எனக்கு எழுதியிருந்தான்!
இந்த அமீனை பகைத்துக் கொள் பவர்களுக்கு என்ன கதியாகும் என்று காட்டுங்கள் பயலுக்கு!
ஐயோ! வேண்டாம்!
வேண்டாமா?- துரை அப்படிச் சொல்ல லாமா?
சரி! கமல்-நீ என்னோடு வா! முக்கியமான வேலைகளை கவனிப்போம்!
நாம் தேடி வந்த கப்பல் இதுதானே!


இந்தக் கப்பலாய் இருக்க முடியாதே சார்!
அதையும் தான் பார்க்கப் போகி-றேனே!
கப்பலில் உள்ள எல்லா சரக்குகளையும் கடலில் தூக்கி எறியுங்கள்!
அய்யோ!-போச்சே! என் பொக்கிஷங்கள் எல்லாம் முழுகிப் போச்சே! என் ரத்தினக் கம்பளங்கள்!
ஏய்! புலம்பிக் கொண்டிருந்தாயானால் சரக்குகளோடு, நீயும் தண்ணீருக்குள் போய் விடுவாய்!
என்னுடன் வாருங்கள்! உங்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது!
!?


இதோ நான் தேடிவந்த இடம்- இதே மூன்று இரும்பு வளையங்கள் தான்-துருப்பிடித்த நிலையில் உள்ளன பாருங்கள்!
இந்த வளையங்களை சுற்றி நேர் விட்டத்தில் இப்படி திருப்பினால்-
கிரீச்!
?
மூன்றாவது வளையமும் மசிந்து விட்டது- அப்புறம் என்ன?
க்.ர்.ர்.ர்
சூ-மந்திர காளி!
ஆ! நகைப் பெட்டகம் இருக்கிறதா? இருக்கிறது! இத்தனை வருடம் கழித்தும் வைத்தயிடம் மாறாமல் இருக்கிறதே! அல்லாவிற்கு நன்றி!


அடேய்! பொடிப் பசங்களா! ராஜகுமாரி சலிமாவின் விலை மதிக்க முடியாத நகைகளை கண்குளிரப் பாருங்களடா!
அம்மாடி! தங்க வளையல்கள் - கல் நெக்லஸ்கள்!
மாணிக்கம் பதித்த இந்த கிரீடத்தைப் பார்த்தாயா? கண்ணைப் பறிக்கிறது!
சரி! பார்த்து ரசித்தது போதும்! கிளம்புங்கள்!
கொஞ்சம் பொறுங்கள் அமீன் சாப்!


சாவதற்கு முன்னர் இந்த நகை களின் வரலாற்றைப் பற்றி தெரிந்துகொள்ளலாமா நாங்கள்?
உன் இறுதி ஆசையை நிறை வேற்றுகிறேன்-ஆனால் அது ஓர் பெரிய கதை!
பத்து வருடங்களுக்கு முன்னர் இந் தக் கடலில், கொள்ளையனாக கொடி கட்டிப் பறந்தேன்! ரஷித் தான் என்னுடைய உதவியாளன்- குட்டையன் சிலிமான் அடியா ளாக இருந்தான்!
அப்போது என் பெயர் கருந்தேள் அமீன்!
வழிப்பறி கொள்ளையில் முடிசூடா மன்னன் நான்!


ஒருநாள், நாங்கள் எதிர்பார்த்ததைவிட பெரிய இரை சிக்கியது! ஆசாமி பெரிய பணக்காரர்- ராஜ பரம்பரை-
நீ யாரை வேண்டுமானாலும்-என்ன வேண்டுமானாலும் செய்து கொள்! கண்ணைப் பிடுங்கு-கை, கால்களை வெட்டு-ஆனால் இரண்டே உயிர்களை எங்களின் இரண்டு உயிர்களை மட்டும் விட்டுவிடு! என்னையும், என் செல்லமகள்-சலிமா-வையும் விட்டு விடு!
என்ன மனிதாபிமானம்! எனது பாராட்டுகள்!
ஏய்! நீதான் சுல்தான் ஹாரூன் அல்- புயசிசியா!
இல்லை! நான்- இல்லை- இல்லவே இல்லை!
எங்கள் உயிர்களை நீ காப்பாற்றினால், என் செல்வ மகளுக்கு நான் சேர்த்து வைத்திருக்கும் நவரத்தினங்களையும், தங்கத்தையும் தருகிறேன்! அவளுக்கும் சுல்தானுக்கும் திருமணம் நடக்க விருந்தது!
அல்லாவே! நான் கேட்பதும், பார்ப்பதும் கனவா, அல்ல நினைவா?



இந்த நீர் யானைக்கு இத்தனை டௌரியா? ஹா! ஹா! ஹா!
சலிமாவின் தடைபட்ட திருமணத்தை கோலாகலமாய் கொண்டாடினோம்!
ஆனால் எங்களின் மகிழ்ச்சிக்கு விரைவிலேயே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது! அது புயல் ரூபத்தில் வந்த சாபம்!
நகைப் பெட்டகத்தை முதலில் காப்பாற்றவேண்டும்! இந்த குடிகாரப்பயல்கள் நிதானமில்-லாமல் கடலில் எறிந்துவிடுவார்கள்!

அப்பொழுது—


டேய் அமீன்! நகைப்பெட்டகத்தை எங்கே மறைத்து விட்டாய்? எங்கே? சொல்!
முழுப்பெட்டகத்தையும் அபகரிக்க நினைத்து விட்டாய்- இல்லையா?
ஐயோ!- நகைகள் போச்சே! கப்பலும் மூழ்கி- எல்லாமே போய்விட்டதே!
எல்லாம் பாவத்தின் சம்பளம் தான்!



ஆழ்கடலில் மூழ்கிய கப்பலை நீங்கள் எப்படி வெளியே எடுத்தீர்கள் என்று எனக்கு இன்னமும் புரியவில்லை! அதைப்பற்றி எனக்குக் கவலையுமில்லை!
என் தங்கம்- என் சொத்து எனக்கு கிடைத்துவிட்டது! ஹா! ஹா! அது போதும்!
சரி விளையாட்டு முடிந்தது தம்பிகளா!
கோழைப் பயல்களா?
உன் கதையெல்லாம் என்னிடம் பலிக்காது!
ஆ- இந்த மாயவிளக்கை எடுக்க முடிந்தால்-
ஆ- அழகாகயிருக்கிறதே விளக்கு!
ஆதிகாலத்து விளக்கு! என் சிநேகிதியிடம் இதைக் கொடுக்கலாமே! அன்பளிப்பென்றால் அவளுக்கு கொள்ளை ஆசை!


அந்த விளக்கைக்கொடு! அதற்கு ஒரு மதிப்பும் கிடையாது!
அடேய் பொடியா! நீ போகிற இடத்துக்கு விளக்கு தேவையிருக்காது!
ஏய்! சோமாரி! என் தம்பியை மட்டும் உயிரோடு விட்டுவிடு!
பொடியன் சொன்னது சரிதான்! விளக்கு முழுவதும் துருப்-பிடித்து விட்டது!
சுத்தமாய் துடைத்தால் புதுசுபோல் தெரியும்!


ஏய்! தூங்கிக்கொண்டிருந்த என்னை யார் அழைத்தது? வயதான காலத்தில் இப்-படியெல்லாம் நொடிக்கு நூறு தரம் என்றால் வர முடியாது!
டூப்!
ஆ! இதென்ன விளக்கின் மீது ஆசைப்பட்டது விபரீதமாகிவிட்டது!
சூ-மந்திரகாளி
டிஷ்-ஷ்
அடச்சீ! பாழாய்ப் போகும் மந்-திரம் இப்பொழுதும் காலை வாறி விட்டது! தூக்கத்தையா கலைக்கிறீர்கள்? உங்களை என்னசெய்கிறேன் பாருங்கள்!


எது சரியான மந்திரம்
இதுவா? அதுவா?
இல்லே! இரண்டும்
இல்லையா?
கா-சும்-ஜிம்!
விஷ்!
புஷ்
ஆவ்-நாம் பிழைத்தோம்-ஒருவழி
யாக சரியான மந்திரம் சொல்லி
நம்மை விடுவித்து விட்டது
கிழம்!
இப்பொழுது நிலைமை
நமக்கு சாதகமாய்
இருக்கிறது!
சத்!
சத்


ஹி! ஹி! ஹி!
எல்லா எலிப்பசங்களையும் கடலிலே தள்ளிவிடலாம்!
உண்மையிலேயே நீ கில்லாடி தான்! தக்க சமயத்தில் எங்களை காப்பாற்றிவிட்டாய்!
நீ ஒரு ஆவித் திலகம்!
நான்கு நாட்கள் கழித்து தாக்பாத்தில்-
நம் சரக்குகள் காலி! ஆனால் இந்தப் பெட்டகத்தில் உள்ளவை விலைமதிக்க முடியாத சரக்கு!
வாழ்நாளெல்லாம்- நாம் இதை செலவழித்து வாழலாம்!


நான் நினைத்த சாப்பாட்டை ருசித்துச் சாப் பிடுவேன்!
நான் அருமை யான வீடு கட்டப் போகிறேன்!
அடடா! நினைத்தாலே இனிக்கிறதே! பணம்- சுகம்- கவலையற்ற வாழ்க்கை!
அப்பொழுது-
ஐயா! தர்மம் போடுங்கய்யா!
தர்மமா-? இந்த அலி இருக்கும் நகரில் வறுமையா? சே!
?
இந்தா தம்பி-தர்மம்- இந்தப் பொற்காசுகளை வைத்து நீ பிழைத்துக் கொள்!
ஐயையோ!
எல்லோரும் ஓடி வாருங்கள்! என் உடன் பிறவா சகோ தரன் அலியின் தயாள குணத் தைக் கண்குளிர வந்து பாருங்கள்!
சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதே!



மறுகணம்-
மஹா பிரபு! என்னைத் தெரியுதா?
என் பாவங்களை மன்னித்து எனக்குக் கருணை காட்டுங்கள் பிரபு-
பிழைத்துக் கொள்- உனக்கு மாணிக்க கிரீடத்தை தருகிறேன்-
தொடர்ந்து-
நாம் பழைய சினேகிதர்கள் அல்லவா? உனக்கு என்னை நினைவில்லையா அலி?
எனக்கும் உங்கள் உதவி தேவை அலி!
அலி! உனக்கு என்னை மறந்து விட்டதா-உன் சுல்தானின் பேச்சுக்கு மதிப்புக் கொடு!
எல்லோரும் என்னை பெரும் செல்வந்தர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால் என் கணக்குப்புத்தகத்தை சற்று திறந்துபார்த்தால் என் அவலநிலை உனக்குப் புரியும்!
நீங்கள் ஒன்றும் சொல்லத் தேவையில்லை மன்னா! ஒரே நொடியில் எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது!
பெட்டகத்திலுள்ள எல்லாவற்றையும் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்!






# வாசகர் கடிதம்

அன்பார்ந்த வாசகர்களே, 15-2-87

'எதைப் பிரசுரிப்பது எதைப் பிரசுரிக்காமல் இருப்பது என்று ஒரே தலைவலியாகிப் போய் விட்டது' ஆமாம்- ஜூனியரின் முதல்இதழைப் படித்தவுடன் நீங்கள் அனுப்பியுள்ள பாராட்டுக்கடிதங்களைப் பற்றித்தான் சொல்கிறேன்! அனைவருக்கும் ஜூனியரின் அமைப்பு. கதை. வண்ணம் பயங்கரமாய் பிடித்துப் போய்விட்டது என்பதில் துளியும் சந்தேகமில்லை! இதோ- இருக்கின்ற இடத்தில் உங்களின் பாராட்டுக்களில் சிலவற்றை பிரசுரித்துள்ளேன்.

S. விஜயன்.

● **M. பாண்டி, நரிமேடு.**

இது போலவே பின் வெளிவரும் கதைகளும் இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். படங்கள் சூப்பர். நீங்கள் சொன்னபடி ஜூனியர் 16அடி பாயவில்லை. ஆனால் 32 அடி பாய்ந்துவிட்டது.

● **K. நூர்தீன், மூரார்பாது.**

ஜூனியர் லயன் காமிக்சின் அட்டை படம் தூள். அது மட்டும் அல்ல. விலையும் மலிவு.

● **K. செந்தில் குமரன் இடைப்பாடி.**

இரண்டேருபாயில் இவ்வளவு பக்கங்கள் அதுவும்கலரில் அசத்திவிட்டீர்கள். என்றென்றும் தங்களின் பணி தொடரட்டும்.

● **M. முருகன் மதுரை-17.**

நீ வாழ பிறரை கெடுக்காதே என்ற உணர்வை உணர்த்தியது சூப்பர் சர்க்கஸ்.

● **M. சுரேஷ், கரூர்.**

சூப்பர் சர்க்களின் தலைப்பினைப் போலவே சூப்பராக இருந்தது.

● **R. முருகேசன். நாமக்கல்.**

லக்கி லூக் செய்த சாதனையைப் பார்தது விழுந்து விழுந்து சிரித்தேன். இனிமேல் ஜூனியரை வெளியிடு முன் இலவச இணைப்பாக வயிற்றுவலி மாத்திரை அனுப்புங்கள்.

● **R. நாகராஜன், பக்கநாடு.**

நான் எந்த 2ருபாய் காமிக்ஸ்களையும் அரை மணி நேரத்தில் படித்து விடுவேன். நான் நமது ஜூனியர்லயனை வாங்கி அரைமணி நேரத்தில் படித்து முடித்துவிடலாம் என்று அமர்ந்தேன். அவ்வளவுதான் 1மணி நேரம் கழித்து தான் எழுந்தேன், பஸ்ஸையும் விட்டு விட்டேன்


சிக்பில் தோன்றும்
அதிரடி மன்னன்!
ஜூனியர்
லயன் காமிக்ஸ்
முழு வண்ணத்தில்
ரூ. 1.25
அடுத்த வெளியீடு!


மினி
லயன்
மரண
சர்க்கஸ்!
ரூ.
1/-
விற்பனையாகிறது!


மினி லயன்
மரண சர்க்கஸ்!
ரூ. 1/-
விற்பனையாகிறது!


உலகம் சுற்றும் அலிபாபா!
ஜூனியர் லயன் காமிக்ஸ்
முழு வண்ண சித்திரக் கதை!